பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத் திட்டம் (DWCUA) குறித்த பயிற்சி

## கையேடு



**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்**

கோயம்புத்தூர்



பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத்திட்டம் (DWCUA) குறித்த பயிற்சி

## கையேடு

ஆக்கம் :

*நகராட்சி நிர்வாக ஆணையரகம்*

சென்னை

*பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்*

*தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்*

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

திருத்திய பதிப்பு : 2007

வெளியிடுவோர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி : 0422-2441086,
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net
இணையம் : www.tnius.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் | 3 |
| 2. | நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் | 4 |
| 3. | DWCUA உறுப்பினர்களின் திறனை மேம்படுத்துதல் | 7 |
| 4. | வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களும் விற்பனை முறைகளும் | 9 |
| 5. | திட்ட அறிக்கை - மாதிரி அறிக்கைகள் | 13 |
| 5.1 | ஒயிட் பினாயில் | 14 |
| 5.2 | பேக்கரித் தொழில் | 17 |
| 5.3 | விழா நடத்தத் தேவையானவற்றை வாடகைக்கு விடுதல் | 19 |
| 5.4 | குழந்தைகள் காப்பகம் (Creches) | 21 |
| 5.5 | தட்டெழுத்துப் பயிற்சி நிலையம் (Typewriting Institute) | 22 |
| 5.6 | குளிர் உணவுக்கடை | 23 |
| 5.7 | வறுத்த உணவுப் பொருட்கள் (Fried Foods) | 24 |
| 5.8 | சாகோ வளையம் | 25 |
| 5.9 | பழரசக் கடை (Fruit Juice stall) | 26 |

5.10 ஸாப்ட் ஐஸ்கிரீம் கடை (Soft Ice Cream Shop) 27

5.11 பாப்கார்ன் (Popcorn) 29

5.12 திரவசோப்புகள் 31

5.13 கற்பூர வில்லைகள் 34

## வெற்றியின் இரகசியம்

6.1 மஞ்சள் பை தயாரிக்கும் நிறுவனம் 37

6.2 கட்பீஸ் துணி விற்பனை 39

6.3 பேக்கரிப் பொருட்கள் உற்பத்தி செய்தல் 41

6.4 மெழுகுவர்த்தி உற்பத்தி 42

6.5 சிறு பால்பண்ணை 43

6.6 பட்டுச் சேலை நெசவுத் தொழில் 45

6.7 காலணி தயாரிக்கும் நிறுவனம் 47

# முன்னுரை

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (*Swarna Jayanthi Shahari Rojgar Yojana- SJSRY*), அடிப்படையில், சமுதாய குழுக்களை ஏற்படுத்துதல், அதன் வாயிலாக சுய தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்திட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வறுமைக்கோட்டிற்கும் கீழ் வாழும் நகர்ப்புற ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயல்படுகிறது. மக்களின் பங்களிப்பால் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமான காரணிகளாக, பயிற்சிகள் மற்றும் தகவல், கல்வி, தொடர்புகள் போன்றவை அத்தியவசியமாகின்றன. இதை நடைமுறைப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு கோவையிலுள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தை இத்திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்கும் முதன்மை நிறுவனமாக தெரிவு செய்துள்ளது.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு, ஏற்கனவே இந்நிறுவனம் பயிற்சி அளித்து வருகிறது.

நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இக்கையேடு மிகவும் உபயோகமாக இருக்கும் என நம்புகிறேன்.

இக் கையேட்டில் பிரத்யோகமாக வெற்றியின் இரகசியம் என்ற பகுதியில் பல்வேறு சுய உதவிக் குழுக்களின் தொழில் வளர்ச்சியை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இப் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் குறித்த பயிற்சித் தலைப்புகளில் நல்ல அனுபவமும் பயிற்சியும் பெற்று முழு ஒத்துழைப்பினை நல்கி வரும், அனைத்து ஆணையாளர்களுக்கும் உதவி திட்ட அலுவலர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் - 641 011

ப. கனகசபாபதி
இயக்குநர்

# 1. நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத்திட்டம்

## URBAN SELF EMPLOYMENT PROGRAMME

சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா திட்டம் 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நகர்ப்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பயனாளிகளுக்கு சுய வேலை வாய்ப்பினை உருவாக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகும். இத்திட்டமானது பல உட்கூறுகளைத் தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருகின்றது. மேலும் இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்குப் பெரிதும் உதவி புரிகின்றது.

சமுதாய அமைப்புகளை உருவாக்கிப் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். இந்த அமைப்பே பயனாளிகளுக்குப் பொருத்தமான பயன்களைப் பெற்றிட உதவி வருகின்றது.



### நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. நகர்ப்புறத்தில் வசிக்கும் தனிநபர் ஏழைப் பயனாளிக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை அமைக்க உதவி செய்தல்.
2. நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழைப் பெண்கள், குழுவிற்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல். இத்துணைத்திட்டத்தினை நகர்ப்புறத்தில் வசிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டம் என்றும் அழைக்கலாம்.
3. பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்தல், திறமையும் வலிமையுமிக்க பயனாளிகள் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களில் பங்கு பெறும் மற்றவர்கள் ஆகியவர்களை மேம்பாடு செய்து, அவர்களிடம் சிறுதொழில்களில் முனையும் திறமையை வளர்த்துக் கொள்ள உதவி புரிதல்.

# 2. நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம்

## DEVELOPMENT OF WOMEN AND CHILDREN IN URBAN AREAS (DWCUA)

சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை அமைக்க முனையும் தனியான பெண் அல்லது பெண்கள் குழுக்களாக அமைந்து செயல்பட ஏதுவாக இத்திட்டம் சிறப்பாக மாற்றப்பட்டு விரிவாக அளிக்கப்பட்டுள்ளது. அந்தந்த உள்ளூர் நிலைமைகட்கு ஏற்ற வண்ணம், அப்பெண்களின் ஆர்வத்திற்கிணங்கவும், அப்பெண்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகட்கு ஏற்பவும், அப்பெண்கள் தத்தம் தனித்தனித் திறமைகட்கேற்பவும் பெண்கள் குழுக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கும் பல்வேறு சிறு தொழில்களில் ஈடுபடுவர். வருவாயை ஈட்டுவது மட்டுமே நோக்கம் என்ற நிலையில்லாது பெண்கள் குழுக்கள் நல்ல வேலை வாய்ப்புகளைத் தாமே உருவாக்கித் தத்தம் உரிமைகளைத் தாமே வென்றெடுத்துப் பிறரைச் சாராமல் சுய சார்பு உடையவர்களாகத் திகழும் முறைக்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் 'மானியம்' பெற, நகர்ப்புற ஏழைப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைப்புகளில் உள்ள பெண்கள், குறைந்தது பத்துப் பேர் இணைந்து ஒரு குழுவாக அமைய வேண்டும். வருவாய் தரத்தக்க சிறு தொழில்களை (Income Generating Activities) ஆரம்பிக்கும் முன் இக்குழுவில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் மற்றொரு பெண்ணை நன்கு தெரிந்தவராகவும், குழு எதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்ற நோக்கத்தையும் குழுவின் வலிமையையும், ஒவ்வொரு பெண்ணின் தகுதியையும் அவர்தம் தனித் திறமையையும் அறிந்தவராகவும் இருக்க வேண்டும். இக்குழு தனக்குள் ஓர் அமைப்பாளரைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த குழு தனக்குரிய சிறு தொழில் ஒன்றினைத் தேர்வு செய்து வைத்துக் கொள்ள

வேண்டும். இச்சிறு தொழிலைத் தேர்வு செய்யும் பொழுது மிகக் கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில், இக்குழுவின் எதிர்காலம் முற்றிலும் இச்சிறு தொழிலில்தான் அடங்கியுள்ளது. கூடுமானவரை நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைப்பு (U.P.E.C.) ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்வேறு சிறு தொழில்கள் அடங்கிய பட்டியலிலிருந்து அந்தந்த உள்ளூர்ப் பகுதிக்குத் தகுந்தாற் போல் சிறுதொழில் தேர்வு செய்யப்பட வேண்டும். இத்தகைய சிறுகுழு ஒவ்வொன்றும் சிக்கனம் மற்றும் நாணய சங்கம் ஒன்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

## நிதி வழங்கும் முறை

நகர்ப்புற ஏழை மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைப்புகள் மான்யமாக ரூ. 1, 25, 000/- அல்லது திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் இதில் எது குறைவான தொகையோ அதைப் பெறத் தகுதியுடையவை.

## நிர்வாகத் தேர்ச்சி உத்திகள்

- முறையாகத் திட்டமிடுதல்
- திறமையான நிர்வாகமும் , சுமூகமான கூட்டு முயற்சிகளும்
- அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்
- பிரச்சனைகளைச் சமாளித்தல், தக்க முடிவுகள் மேற்கொள்ளுதல்
- முறையான தகவல் தொடர்பு
- செயல் முறை மேற்பார்வை
- நம்பிக்கையூட்டும் முறையில் தீர்மானங்களைச் செயல்படுத்துதல்
- திறமை நோக்குடன் பணிகள் நிறைவேற்றப்படுதல்
- தொழில் உறவுகள்
- காலம் தவறாமைக்குரிய வழிமுறைகள்

## DWCUA உறுப்பினர்களின் பண்புகள்

- குறிக்கோளை அடைவதற்கான தேவை
- புதுமைகளைப் படைக்கும் திறன்
- பிறரைத் தம்மில் ஈர்க்கும் திறமை
- சிரமங்களை எதிர்கொள்ளும் துணிச்சல்
- வெற்றியில் நம்பிக்கை
- அளவோடு சிரமங்களை ஏற்கும் திறமை
- வெளிப்படையான செயல்பாடுகள்
- அனுபவரீதியாகக் கற்றுணர்தல்
- உயர்ந்த எண்ணம்
- ஏற்று நடத்தும் வேலையில் முழு ஈடுபாட்டுத்திறன்
- பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன்.
- முழு அறிவுத்திறன், சாமர்த்தியம்
- சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் உண்மை நிலையை அறிந்து கொள்ளுதல்
- தேவையான போது பிறரின் உதவியை நாடுதல்
- செயலை நிறைவேற்றி முடிக்கும் முனைப்பு
- கற்பனைத்திறனுக்கேற்பப் புதிய படைப்புகளை உருவாக்கும் திறமை
- பழமையானவற்றில் திருப்தி கொள்ளாமை
- நேரத்தைத் திட்டமிடுதல் (காலத்திற்கேற்ற செயல்பாடு)
- சுய சிந்தனையும் செயல்பாடும்
- கடின உழைப்பில் ஆர்வம்
- செயல் திறனை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம்
- பிறரைவிடச் சிறப்பான முறையில் செயல்படும் திறன்
- தாமாகவே பொறுப்பேற்றுக்கொள்ளும் எண்ணம்
- மாற்றங்களைச் சமாளிக்கும் திறன் / போக்கினை அறிந்து அதற்கேற்பச் செயல்படுதல்

# 3. DWCUA - உறுப்பினர்களின் திறனை மேம்படுத்துதல்

## SKILL UPGRADATION OF DWCUA MEMBERS

தொழிலினை நிர்வகிப்பதற்கும், நடத்துவதற்கும் தேவையான திறன்களை மேம்படுத்திக்கொள்வது DWCUA உறுப்பினர்களின் முக்கியத் தேவையாகும்.

### தன்னார்ந்த செயல்திறன் :

மற்றவர்கள் "இதைச் செய்" என்று கூறுவதற்கு அல்லது கட்டாயப்படுத்துவதற்கு முன் அச்செயலைச் செய்து முடித்தல்.

### வாய்ப்பினைக் கண்டறிந்து பயன்படுத்துதல் :

ஏதாவது புதிய வாய்ப்புகள் கிடைத்தால் அவற்றை உடனே உபயோகப்படுத்திக்கொள்ளும் திறமை படைத்திருக்க வேண்டும்.

### விடாமுயற்சி :

குறிக்கோளை அடைவதற்கு முன் ஏற்படும் தடைகளைத் தகர்த்தெரிந்து விடா முயற்சியுடன் அந்தக் குறிக்கோளை அடைதல்.

### செய்தி சேகரித்தல் :

ஒரு தொழில் அல்லது நிறுவனம் தொடங்குவதற்கு முன் ஆய்வு மூலமும் நிபுணர் அல்லது வல்லுநர்களிடமும் ஆலோசனை பெற்றுத் துவங்க வேண்டும்.

### வேலைத் தரத்தில் ஈடுபாடு :

தாம் செய்யும் வேலை நல்ல தரமுடையதாக இருக்க வேண்டும் என்ற விருப்பம்.

**தனது வேலையில் ஈடுபாடு :**

ஒரு வேலையை முடிக்க முழுமையாகச் செயல்படுதல், அதில் ஏற்படும் பிரச்சனைக்குத் தம்மையே முழுப் பொறுப்பாக ஏற்றுக் கொள்வது.

**திறமையான செயல்பாடு :**

உற்பத்தியை அதிகமாக்கி உற்பத்திச் செலவைக் குறைக்கும் வழிமுறைகளைக் கண்டுபிடித்துச் செயல்படுதல், குறைந்த செலவில் அதிக பலனை அடைவது.

**முறையாகத் திட்டமிடுதல் :**

ஒரு குறிக்கோளை அடையத் திட்டமிட்டுச் செயல்படுதல்.

**பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் :**

பிரச்சனைக்குத் தீர்வுகாணப் புதிய மற்றும் புதுமையான வழிகளைக் கண்டுபிடித்தல்

**தன்னம்பிக்கை :**

தன் மீதும், தனது திறமைகளின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை

**தன் முனைப்பு :**

மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுதல், அவர்கள் செய்யத் தவறும் பொழுது கடிந்துரைத்தல்.

**இணங்குவித்தல் :**

பிறரைத் தன்வசப்படுத்திக் கொள்ளும் திறன்

**கண்காணித்தல் :**

மற்றவர்களுக்குக் கொடுத்த வேலையை அவர்கள் முடித்துவிட்டார்களா என்று உறுதிப்படுத்துவது.

# 4. வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களும் விற்பனை முறைகளும்

## INCOME GENERATING ACTIVITIES AND MARKETING TECHNIQUES

சேமிப்பு செய்து சிறப்பாகச் செயல்படும் அமைப்புகளின் அடுத்த கட்ட வளர்ச்சியானது, வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை மேற்கொள்வதன் மூலம் தான் வரும். தொழில்களைத் துவக்கிச் செயல்படுத்தும் போது கீழ்க்காணும் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

அ) தொழில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

ஆ) வரவு-செலவுக் கணக்கைப் பராமரிக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இ) தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தைக் கட்டுப்படுத்தி நல்ல தரமான பொருட்களைத் தயாரிக்கச் செய்யலாம். தரக் கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கிக் கட்டுப்பாட்டு முறையை உற்பத்திப் பொருள் வாரியாகத் தெளிவாக எடுத்துக்கூறலாம்.

ஈ) பொருட்களின் தரத்திற்கு ஏற்ற விலை கிடைக்கச் செய்யலாம். (உ-ம்) பால் விற்கும் போது கொழுப்பிற்கேற்ற விலை கிடைக்கச் செய்ய வேண்டுமானால் உறுப்பினர்களுக்குச் கொழுப்பு அளவிடும் 'லாக்டோ மீட்டரை'ப் பயன்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அறியாமையினால் ஏமாற்றப் படுவார்கள்.

உ) கூட்டாகவோ தனித்தனியாகவோ குழு உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் ஒரே விதமான பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி விலை நிர்ணயம் செய்துகொண்டு விற்பனை செய்யலாம். இதன்மூலம் அதிகவிலை பெறலாம்.

ஊ) தயாரிக்கப்படும் பொருட்களை அருகிலுள்ள அல்லது மாவட்ட நகரிலுள்ள சந்தையிலோ, பொருட்காட்சிகளின் மூலமாகவோ விற்பனை செய்ய ஊக்கப்படுத்தலாம். இதன் மூலம் பொருட்களின் விலையை நிர்ணயிக்கவும், தரத்தை உயர்த்தவும், சந்தையில் கிடைக்கும் அதே மாதிரியான பொருள்களின் விலை மற்றும் தரம் பற்றித் தெரிந்து கொள்ளவும் குழு உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். தரமற்ற பொருட்களை வாடிக்கையாளர்கள் விரும்ப மாட்டார்கள். (உ-ம்) வேளாண்மை விளை பொருட்களை உற்பத்தி செய்யும் குழுக்களைத் தமிழக அரசு அறிவித்துள்ள 'உழவர் சந்தை'யில் விற்பனை செய்யலாம்.

எ) பொருட்களைச் சுத்தப்படுத்தித் தரம் பிரித்துப் பைகளில் இட்டு பெயர்/விலாசம்/ரக அட்டையுடன் விற்றால் நல்ல விலை கிடைக்கும். (உ-ம்) புளியைக் கூறு போட்டு விற்பதை விட விதையை நீக்கி விட்டுச் சுத்தம் செய்த பின் அழகான கவர்களில் இட்டு விற்பனை செய்தால் நல்ல விலை கிடைக்கும்.

ஏ) குழுக்களிடையே பொருட்களை விற்பதே நல்ல முறையாகும். வாய்ப்பு குறையும் பொழுது மற்ற குழுக்களிடம் விற்பனை செய்யலாம்.

ஐ) பிற மாவட்டங்களில் நடக்கும் பொருட்காட்சிகளில் அல்லது பொருட்களை விற்பனை செய்யலாம்.

ஒ) விற்பனைசெய்தபின் வாடிக்கையாளரின் கருத்துக்களைக் கேட்டறிந்து பொருளின் தரத்தை மேன்மைப் படுத்தும் பழக்கத்தைக் குழுக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஓ) வங்கியிலிருந்து பெற்ற கடனைக் கண்ணியமாகத் தவணை தவறாமல் திரும்பக் கட்டும் பழக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும்.

ஔ) விற்பனை செய்வதற்கு பேச்சாற்றல் மற்றும் விளம்பரம் மிக அவசியம். தங்கள் பொருட்களின் மேன்மையைப் பற்றித் தெளிவாக விளக்கவும், வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்க்கவும், குழு உறுப்பினர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

## குழு உறுப்பினர்களின் தேர்வு - தகுதிகள்

- உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழைப் பெண்களாக இருத்தல் வேண்டும்.
- உறுப்பினர்கள் ஒரே பகுதியில் வசிப்பவராக இருத்தல் நல்லது.
- திருமணமானவராக இருப்பது விரும்பத்தக்கது.
- 18 முதல் 60 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- தன்னார்வம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒற்றுமை உணர்வு உள்ளவராக இருக்க வேண்டும்.
- கணவனை இழந்த பெண்கள், மணமுறிவு பெற்ற பெண்கள், தனிப்பட்ட பெண்கள், பெண்களே தனியாக சம்பாதித்து குடும்பம் நடத்தும் குடும்பங்களில் உள்ள உறுப்பினர்கள் போன்றோரை குழு உறுப்பினராகக் கொண்டிருக்கலாம்.
- ஆதி திராவிட மகளிர், குடிசைவாழ் மகளிர், ஊனமுற்றவர்கள், நிலமற்ற ஏழைப் பெண்கள். ஆகியோரும் இக் குழுவில் உறுப்பினராக இருக்கலாம்.

## தவிர்க்கப்பட வேண்டிவை

- கடன் கிடைக்கும், மானியம் கிடைக்கும் என்று பொய்வாக்குறுதி கூறி ஏழைப்பெண்களை உறுப்பினர்களாக்கிக் குழுக்களை அமைப்பது தவறு. இத்தகைய குழுக்கள் நிலைத்துச் செயல்படாது. மாறாக ஏழைப்பெண்களுக்கு ஏமாற்றத்தைத் தரும்.
- வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மகளிரைக் குழுக்களில் சேர்க்கக்கூடாது.
- ஏற்கனவே ஒரு குழுவில் உறுப்பினராகச் செயல்பட்டு வரும் பெண்ணைப் புதிய குழுவில் உறுப்பினராகச் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் ஏதேனும் ஒரு குழுவில் மட்டுமே உறுப்பினராக இருப்பது நலம்.

## பதிவேடுகள் (Registers)

ஒவ்வொரு குழுவும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பதிவேடுகள் பராமரிக்கும் பயிற்சி தரப்படும். பதிவேடுகள் குழுத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரால் பராமரிக்கப்பட வேண்டும்.

## கவனத்தில் கொள்ள வேண்டியவை

குழுச் செயல்பாடுகளைப் பதிவேட்டில் எழுத வேண்டும். பதிவேடுகள் குழுவிடம் தான் இருக்க வேண்டும். பதிவேடுகளை அலுவலகத்தில் அல்லது வேறு இடங்களில் வைப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

## பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் :

- ❒ வருகைப்பதிவேடு
- ❒ தீர்மானப்பதிவேடு
- ❒ கணக்குப்பதிவேடு
- ❒ ரொக்கப்பதிவேடு
- ❒ தனிநபர் சேமிப்புப் புத்தகம்
- ❒ சேமிப்புப் பதிவேடு

# 5. திட்ட அறிக்கை - மாதிரி அறிக்கைகள்

## (PROJECT REPORT - MODEL REPORTS)

DWCUA நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுக்களின் பொறுப்புக்களைப் புரிந்த பின்பு திட்ட அறிக்கை தயாரித்தல் அவசியம். திட்ட அறிக்கையைத் தயார் செய்து வங்கிக்கு அனுப்ப வேண்டும். வங்கி மேலாளர் பரிந்துரையின் பெயரில் கடனுதவி கிடைக்கும்.

| | |
|---|---|
| அதிகபட்சக் கடன் உதவி | ரூ.2,50,000 |
| மானியம் | ரூ.1,25,000 (அல்லது) திட்டமதிப்பீட்டில் 50% |
| குழுவின் பங்குத் தொகை | 5% |
| வங்கியிலிருந்து கிடைக்கும் கடன் உதவி | 45% |

பகுதியின் தேவைக்கு ஏற்பத் தொழில் தேர்வு செய்து திட்ட அறிக்கை தயார் செய்தல் வேண்டும். திட்ட அறிக்கை தயார் செய்ய மாவட்டத் தொழில் மையத்தினை அணுகி விவரம் பெறலாம்.

மாவட்டத் தொழில் மையத்தின் தகவலில் பெண்கள் குழு தேர்வு செய்யும் சில தொழில்கள் மற்றும் அதன் திட்ட மதிப்பீடு வருமாறு:

**தொழில் :**

1. ஒயிட் பினாயில் தயாரிப்பு
2. பேக்கரித்தொழில் செய்தல்
3. விழா நடத்தத் தேவையானவற்றை வாடகைக்கு விடுதல்
4. குழந்தைகள் காப்பகம்
5. தட்டெழுத்துப் பயிற்சி நிறுவனம்
6. குளிர் உணவுக்கடை
7. வறுத்த உணவுப்பொருட்கள்
8. சாகோ வளையம்
9. பழரசக்கடை
10. ஸாப்டு ஐஸ் கிரீம் கடை
11. பாப் கார்ன்
12. திரவச்சோப்புகள் தயாரிப்பு

# 5.1 ஒயிட் பினாயில்

## (WHITE PHENOYL)

### பயன்பாடு

ஒயிட் பினாயில் வீடுகள், ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் அலுவலகங்களில் சுத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

### தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள்

| | |
|---|---|
| பைன் எண்ணெய் | 1 லிட்டர் |
| டர்பன்டைன் எண்ணெய் | 1லிட்டர் |
| ஒலிக் அமிலம் | 400 மி.லி |
| மிருதுவான சோப் | 1கிலோ |
| கிட்ரோனலனா எண்ணெய் | 5 மி.லி |
| தண்ணீர் | 20 லிட்டர் |

### தேவையும் வாய்ப்பும்

அதிக எண்ணிக்கையுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் இதனைத் தயாரித்தாலும், அவைகள் பெரு நகர்ப்புறத்தில் மட்டுமே தயாரிப்பது குறிப்பிடத்தக்கதாகும். தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவை மாவட்டத் தலைநகரில் உற்பத்தி செய்யப்பட்டு அங்கேயே விற்பனை செய்தால் நல்ல வரவேற்பு கிட்டும் எனக் கருதப்படுகிறது.

### செய்முறை

எல்லா மூலப்பொருட்களும் கலவைத்தொட்டியில் சேர்த்துக் கலக்கப்படுகின்றன. இக்கலவையுடன் தண்ணீர் வேண்டிய அளவு சேர்க்கப்பட்டு மீண்டும் நன்றாகக் கலக்கப்படுகிறது. பின்பு அவை

ஜெரி கலன்கள், பாட்டில்களில் ஊற்றப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

## திட்ட விவரம்

தயாரிப்பு ஆற்றல் : 10,000 லிட்டர் ஆண்டிற்கு

## தேவையான நிலம் மற்றும் கட்டிடம்

| | |
|---|---|
| பரப்பு | 300 சதுரஅடி |
| வாடகை | ரூ.800 /- |

## எந்திரம் மற்றும் உபகரணங்கள்

| | | |
|---|---|---|
| எம்.எஸ். கலவைத்தொட்டி, 1 கிலோ அளவு கொண்ட வாளிகள், பீப்பாய்கள், எடை எந்திரங்கள் | ரூ. | 12,000 /- |

## மற்ற உபகரணங்கள்

நடப்பு முதல் (மாதத்திற்கு)

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் பேக்கிங் வரையில் | ரூ. | 25,000 |
| ஊழியர்கள் மற்றும் வேலையாட்கள் | ரூ. | 1,600 |
| வாடகை மற்றும் மின்சாரம் | ரூ. | 1,000 |
| இதரசெலவுகள் | ரூ. | 400 |
| | ரூ. | 28,000 |
| மொத்த முதல் | ரூ. | 40,000 |

## மொத்த உற்பத்திச் செலவு ஆண்டிற்கு

| | |
|---|---|
| தொடர் செலவுகள் | ரூ. 3,36,000 |
| வட்டி 12% | ரூ. 4,800 |
| தேய்மானம் 10% | ரூ. 1,200 |
| | ரூ. 3,42,000 |
| ஆண்டு விற்பனை | ரூ. 3, 80,000 |
| எதிர்பார்ப்பு லாபம் ஆண்டிற்கு விற்பனையில் லாபம் 10% : | ரூ. 38, 000 |

வேலைவாய்ப்பு இருவருக்கு

## மூலப்பொருட்கள் விற்பனையாளர்கள்

M/s.சாந்தி கெமிகல் கார்ப்பரேஷன்,
80 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை -1.

M/s.மணிசாமி கெமிக்கல்ஸ்,
127,நைனியப்ப நாயக்கன் தெரு,சென்னை -3.

M/s.கோபீர் கெமிக்கல்ஸ்,
134,நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை -3.

M/s.கண்ணன் அண்டு கம்பெனி,
127,நைனியப்ப நாயக்கன் தெரு,சென்னை -3.

## பயிற்சி

SISI சென்னை

# 5. 2. பேக்கரித் தொழில்

## தேவையும் வாய்ப்பும் :

கணவன், மனைவி, குழந்தைகள் என்று அனைவரும் அவசரமாக வாழ்க்கை நடத்தும் இக்காலத்தில் எளிதில் கிடைக்கும் பேக்கரி பொருட்களுக்குத் தேவை அதிகரித்து வருகிறது. நகரங்களில் கடைகள் உணவு விடுதிகள், சினிமா தியேட்டர்கள், பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள், அரசாங்க மருத்துவமனை, நூற்பு ஆலைகள் மற்ற தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் தேவைக்கேற்ப பப்ஸ், கேக், பிரட், வர்க்கி , இனிப்பு பன், தேங்காய் பன், இனிப்பு பப்ஸ், வெஜிடபிள் பப்ஸ், பிஸ்கட் மற்றும் ரங்க் முதலியவற்றை தயாரித்து மொத்த விலைக்கு விற்கலாம். தரமான பேக்கரி பொருட்களின் ருசி, மணம், பசியை தூண்டி அனைவரையும் வாங்கத் தூண்டும். எனவே பேக்கரி தொழில் ஆரம்பித்தால் நிச்சயம் பொருளாதாரத்தில் முன்னேறலாம்.

## சிறிய அளவில் பேக்கரி தொடங்கத் தேவைப்படும் மூலதனம்

**தேவையான மூலதனம் :**

| | | |
|---|---|---|
| செங்கல் அடுப்பு | ரூ. | 11,250.00 |
| பன் தட்டு (100 x10) | ரூ. | 1,000.00 |
| பிரட் அச்சு (50 x 10) | ரூ. | 500.00 |
| கடப்பா மேஜை (4 ' x 2') 2 Nos | ரூ. | 4,000.00 |
| பாத்திர வகைகள் | ரூ. | 1000.00 |
| சைக்கிள் | ரூ. | 2,500.00 |

| | | |
|---|---|---|
| இதர உபகரணங்கள் (கத்தி, கேக், பீட்டர் மற்றும் பல) | ரூ. | 2,000.00 |
| இதர பொருட்கள் | ரூ. | 1,000.00 |
| | | 23,250.00 |

**மூலப்பொருட்கள் (ஒரு வாரம் தேவைக்கு)**

1. மைதா 1மூட்டை
2. சர்க்கரை 1/2 மூட்டை
3. வனஸ்பதி 1 டின் அல்லது 15 கிலோ
4. எண்ணெய் 10 லிட்டர்
5. முட்டை, பழங்கள், பருப்பு வகைகள்
6. ஈஸ்ட், எஸன்ஸ், கலர் மற்றும் பல

மேற்கண்ட பேக்கரியில் கீழ்கண்டவாறு பொருட்கள் தயாரித்து விற்பனை செய்து இலாபம் பெறலாம்.

| | | |
|---|---|---|
| 1. பன் 9000x ரூ. 1.00 | ரூ. | 9000.00 |
| 2. கேக் 100 கிலோ x ரூ. 50.00 | ரூ. | 5000.00 |
| 3. பிஸ்கட் 100 கிலோ x ரூ. 50.00 | ரூ. | 5000.00 |
| 4. இதர பொருட்கள் | ரூ. | 1000.00 |
| மொத்த விற்பனை | ரூ. | 20,000.00 |

## மொத்த உற்பத்திச் செலவு (மாதத்திற்கு)

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள | ரூ. | 12,000.00 |
| கூலி | ரூ, | 3,000.00 |
| இதர செலவு | ரூ, | 1,500.00 |
| மொத்த உற்பத்திச் செலவு | ரூ, | 16,500.00 |

## மொத்த இலாபம் (மாதத்திற்கு)

| | | |
|---|---|---|
| மொத்த விற்பனை வருமானம் | ரூ. | 20,000 |
| மொத்த உற்பத்திச் செலவு | ரூ. | 16,500 |
| இலாபம் | ரூ. | 3,500 |

# 5.3 விழா நடத்தத் தேவையானவற்றை வாடகைக்கு விடுதல்

## அறிமுகம்

நகர்ப்புறங்களில் திருமணம், பிறந்த நாள் விழா, பொதுக்கூட்டம், கலந்துரையாடல் போன்ற விழாக்கள் பெருமளவில் நடைபெறுகின்றன. இத்தகைய விழாக்களுக்குத் தேவையான தற்காலிகத் துணிப்பந்தல் (ஷாமியானா), மேஜை நாற்காலிகள், பாத்திரங்கள் போன்றவற்றை விழா நடத்துபவர்களே சொந்தமாக வைத்திருப்பது என்பது இடப்பற்றாக் குறை போன்ற காரணங்களால் இயலாத காரியமாகிறது. மாறாக இவற்றைத் தேவையான நாட்களுக்கு மட்டும் வாடகைக்கு எடுத்துக் கொள்வது சுலபமாகும். எனவே இவற்றை வாடகைக்கு விடுவது மிக லாபகரமான ஒரு தொழிலாகும்.

இப்பொருட்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லச் சிறிய லாரியை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். இத்தகைய வாடகை நிலையங்களைப் பெரு நகரங்களை ஒட்டி வளரும் பகுதிகளில் அமைப்பது சாலச் சிறந்தது.

| | |
|---|---|
| திட்டத்தின் மொத்த மூலதனம் | ரூ.90,000 |
| ***நிலை மூலதனம்*** | |
| பாத்திரங்கள் | ரூ.30,000 |
| ஷாமியானா | ரூ.15,000 |
| மேஜை நாற்காலிகள் | ரூ.30,000 |
| பிற கருவிகளும் உபகரணங்களும் | ரூ. 5,000 |
| மொத்த நிலை மூலதனம் | ரூ.80,000 |

**நடைமுறை மூலதனம்**

| | | |
|---|---|---|
| இடம்/ கட்டிடம் வாடகை (ஒரு மாதத்திற்கு) | ரூ. | 2,500 |
| திறமையான பணியாளர்கள் 2 நபர்கள் (ஒருவருக்கு மாதச் சம்பளம் ரூ.2,500/- ஒரு மாதம்) | ரூ. | 5,000 |
| உதவியாளர் (மாதச் சம்பளம் ரூ.1300/-) | ரூ. | 1,300 |
| மின்சாரம் | ரூ. | 200 |
| பயணச் செலவு தொடர் செலவினம் | ரூ. | 1,000 |
| மொத்த நடை மூலதனம் | ரூ. | 10,000 |
| மாத வாடகை வருமானம் | ரூ. | 15,000 |
| இலாபம் (மாதத்திற்கு) | ரூ. | 5,000 |

# 5.4. குழந்தைகள் காப்பகம் (Creches)

## அறிமுகம்

பெருகி வரும் நடுத்தரக் குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் வேலை பார்க்கும் பட்சத்தில் அவர்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வேறு நபர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது. இவ்வாறு பிறரை வேலைக்கு அமர்த்துவதில் பாதுகாப்பு போன்ற பல பிரச்சனைகள் இருப்பதால் குழந்தைகள் காப்பகமே சிறந்த தீர்வாக அமைகிறது.

குழந்தைகள் காப்பகங்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கவனித்துப் பராமரிப்பதற்கு மாத அடிப்படையில் நியாயமான கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். 20 முதல் 25 குழந்தைகள் வரை பராமரிக்க இட வசதி இருக்க வேண்டும். நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கொண்ட அமைதியான இடமாக இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| திட்டத்தின் மொத்தத் தொகை | ரூ. 29,000 |
| தொட்டில்கள், துவாலைகள், விரிப்புகள், விளையாட்டுக் கருவிகள்,பொம்மைகள், விசிறிகள் போன்றவை | ரூ. 25,000 |
| கட்டிட வாடகை / 1 மாதத்திற்கு | ரூ. 1,500 |
| பெண் பணியாளர்கள் 4 பேர்கள் (ஒருவருக்கு ரூ.1000 வீதம்) | ரூ. 4,000 |
| மின்சாரம் | ரூ. 200 |
| பால், தின்பண்டம், நீர் மற்றும் இதர வகை செலவு | ரூ. 300 |
| லாபம் ஒரு மாதத்திற்கு | ரூ. 5,000 |

# 5.5 தட்டெழுத்துப் பயிற்சிநிலையம்

## (TYPE WRITING INSTITUTE)

### அறிமுகம்

இன்று பட்டப்படிப்புடன் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, போன்ற அதிகப்படியான தகுதிகள் அரசாங்கத்திலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்பிற்குச் சாதகமாக அமைகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் மாணவர்களைப் பயில்விப்பதோடு மட்டுமல்லாது, தட்டெழுத்து மற்றும் அறிக்கை தயாரித்தல் போன்ற வெளி வேலைகளையும் கட்டணம் வசூலித்துக் கொண்டு செய்து கொடுக்கலாம்.

ஒவ்வொரு ஆண்டும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளிலிருந்து படிப்பை முடித்து வெளிவருகின்றார்கள். அவர்கள் வேலை தேடும் காலத்திலும், படிக்கும் காலத்திலேயும் கூட அதிகப்படியான தகுதி பெற இப்பயிற்சியினை மேற்கொள்கிறார்கள்.

### திட்டத்தின் மொத்த மதிப்பு

| விவரம் | எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| கட்டிட வாடகை/ 1 மாதத்திற்கு | | ரூ. | 1,000 |
| தட்டெழுத்து இயந்திரம் (3 ஆங்கிலம், 3 பிராந்திய மொழி) | 6 | ரூ. | 26,000 |
| மேசைகள், நாற்காலிகள் மற்றும் பிற அலுவலகப் பொருட்கள் | | ரூ. | 10,000 |
| மொத்தம் மூலதனம் | | ரூ. | 36,000 |
| ஆசிரியர் | 1 | ரூ. | 2,500 |
| உதவியாளர் | 1 | ரூ. | 1,500 |
| மின்சாரம் | | ரூ. | 400 |
| கட்டிட மாத வாடகை | | ரூ. | 1000 |
| எழுதுபொருள் மற்றும் இதர செலவினங்கள் | | ரூ. | 250 |
| மொத்தம் | | ரூ. | 5,650 |
| தோராய மாதக் கட்டணம் (6 இயந்திரம் x 8 மணி நேரம்) x ரூ. 200 ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு | | ரூ. | 9,600 |

## 5.6 குளிர் உணவுக் கடை

**அறிமுகம்**

நகரின் மத்தியில் ஜன நடமாட்டம் அதிகமாக உள்ள இடத்தில் அமைய வேண்டும். அங்கு தான் விற்பனை நன்றாக இருக்கும்.

**இடம் மற்றும் கட்டிடம்**

| | |
|---|---|
| மொத்தப் பரப்பு | 150 சதுர அடி |
| வாடகை | ரூ. 500 |

**எந்திரம் மற்றும் உபகரணம்**

| விவரம் | | மதிப்பு |
|---|---|---|
| ஆழ்உறைசெல் உபகரணம் (மோட்டார் இணைப்போடு) | ரூ. | 40,000 |
| பணி மேஜை, நாற்காலி, இரும்பு அலமாரி, விசைசக்தி 3HP | | |

**நடைமுறை முதல்/ மாதத்திற்கு**

**மூலப்பொருட்கள்**

| | |
|---|---|
| கோழிக்கறி,மாமிசம், மீன், குளிர்பானங்கள் தயாரிப்பில் | ரூ. 25,000 |
| **மாத வியாபாரம்** | ரூ. 28,250 |
| நிகர லாபம் மாதம் ரூ.28,250 - 25,000= | ரூ. 3,250 |

**வேலை வாய்ப்பு இருவருக்கு**

**எந்திர விற்பனையாளர்கள்**

M/s.ஆல்பா லாவல் (இந்தியா) பிளாட் 11, 6ஆவது மாடி,
பார்ஸன் மானோர், 602, அண்ணா சாலை, சென்னை -600 006.

M/s.ரிச்சார்ட்ஸன் - குருதலால் (1972)லிட்,
5, சௌடாய் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை -18

M/s.பாம்பே அம்மோனியா பிரைவேட் லிட்,
153, மவுண்ட் ரோடு, சென்னை - 600 002.

# 5.7. வறுத்த உணவுப் பொருட்கள்
## (FRIED FOODS)

### அறிமுகம்

எங்கெங்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதோ அங்கு இது போன்ற கடையை நடத்தலாம். அதிவேகமாக விற்பனை ஆகக்கூடிய பொருட்களானதால் எவ்விதமான பிரச்சனையும் விற்பனையில் இராது.

### நிலம் மற்றும் கட்டிடம்

மொத்த பரப்பு 250 சதுர அடி
மாதவாடகை ரூ. 500
மோட்டார் மின்சாரம் 2HP
எந்திரம் மற்றும் உபகரணம் விவரங்கள்
மேஜை ஸ்டவ், கூடுதல் சிலிண்டர்களோடு வறுக்கும்
கிண்ணங்கள் மற்றும் பாத்திரங்களோடு பாலிதீன் பை
சீலிடும் எந்திரம் எடைத் தராசு,சீலீங் எந்திரம் ரூ.21,000

### பொருட்கள்

உருளைக்கிழங்கு/ வாழைப்பழம்
வேர்க்கடலை, முந்திரி, அவல் (பொரி)
பருப்பு மற்றும் மாவு, எண்ணெய்
மிளகாய்ப் பவுடர், பிளாஸ்டிக் பை, உப்பு ஆகியவை
லாபம் ரூ. 36,000 (வருடத்திற்கு)

### எந்திர விற்பனையாளர்கள்

M/s. சீலர்ஸ் இந்தியா, நெ. 10, குபேர கணபதி தெரு, பாடி, சென்னை 600 050 (சீலிங் எந்திரம்)

M/s. மோதார் பிளாட் (இந்தியா) லிட். EBS பில்டிங், 13, பிளவர்ஸ் தெரு, சென்னை -84

வறுக்கும் தட்டு, பாத்திரம் ஆகியவற்றிக்கு ஆங்காங்கே விற்பனையாளர்கள் உள்ளனர்.

# 5.8. சாகோ வளையம்

## அறிமுகம்

சாப்பாட்டுடனும், சிற்றுண்டியுடனும், இது உபயோகப் படுத்தப்படுகிறது.

## வாடிக்கையாளர்கள்

ஹோட்டல்கள், சிற்றுண்டி சாலைகள், மாணவர் விடுதிகள், பொது விடுதிகள்

## செய்முறை

சாகோ அப்பளம், சாகோ மைதா, அரிசிமாவு ஆகியவை பிரஷர் குக்கரில் வைத்துச் சமைக்கப்படும். பின் அவை சூரிய வெப்பத்தில் காய வைக்கப்பட்டு, பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்படுகின்றன. சில நேரங்களில் தேவையான வண்ணமும் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு சமைக்கப்பட்டவை வளையத் தயாரிப்பு எக்ஸ்டுடர் இயந்திரத்தில் இடப்படும். பின்பு தேவைக்கேற்ற அளவில் நறுக்கப்படும்.

## நாள் / இலக்கு 300 கிலோ

### மூலப்பொருட்கள்

சாகோ மைதா, உப்பு, வண்ணம், பேக்கிங் பொருட்கள்

## எந்திரம் மற்றும் உபகரணங்கள்

| | | |
|---|---|---|
| பிரிப்பான் (எக்ஸ்டுடர்) ஸ்டவ், குக்கர் | ரூ. | 10,750 |
| மொத்த நடைமுறை முதல், மாதம் | ரூ. | 13,250 |
| மொத்த முதல் | ரூ. | 24,000 |

வேலைவாய்ப்பு இருவருக்கு ஆண்டு லாப விகிதம் 14%

## எந்திர விற்பனையாளர்கள்

நவீன்சந்தரா அண்டு கம்பெனி, 150, லிங்கி செட்டித் தெரு, சென்னை -1

யூனிவர்சல் பேக்கிங் கம்பெனி, 4 முகப்பேர் ரோடு, பாடி, சென்னை-50

# 5.9. பழரசக் கடை

## (FRUIT JUICE STALL)

### அறிமுகம்

நல்ல விற்பனைக்குக் கடை அமையும் இடம் முக்கியமான காரணமாகும். ரயில்வே நிலையம், பஸ் நிலையம், திரையரங்கு மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றின் அருகில் அமைவது உகந்ததாகும்.

### நிலம் மற்றும் கட்டிடங்கள்

| | |
|---|---|
| மொத்தப் பரப்பு | 180 சதுர அடி |
| வாடகை | ரூ. 500 |
| விசைச் சக்தி | 2 HP |

### மொத்த எந்திரம் மற்றும் உபகரணம்

| | |
|---|---|
| பிரிட்ஜ், மிக்ஸர்ஸ், செயல் மேசை, நாற்காலி | ரூ. 18,000 |

### மூலப்பொருட்கள்

| | |
|---|---|
| ஆரஞ்சு, பைனாப்பிள், கிரேப், மாம்பழம் பிரதான சர்க்கரை சிரப் | ரூ. 19,250 |
| ஒரு நாள் வியாபாரம் | ரூ. 1,000 |
| ஒரு நாள் தயாரிப்பு | ரூ. 880 |
| நிகரலாபம் ( ரூ.1,000-880 ) = | ரூ. 120/- |
| வேலைவாய்ப்பு இருவருக்கு | |

### எந்திர விற்பனையாளர்கள்

கம்யூனிடி கேனிங் மற்றும் பிரஸர்வேஷன் மையம், 20, ராம சந்திரா ரோடு, தி.நகர், சென்னை -17

# 5.10. ஸாப்ட் ஐஸ்கிரீம் கடை

## (SOFT ICE CREAM SHOP)

### அறிமுகம்

இந்த ஐஸ்கிரீம் பால், பால் பவுடர், கொழுப்பு, சர்க்கரை, சுவையூட்டும் இரசாயனப் பொருட்கள், நிறம் ஆகியவற்றைக் கலந்து குளிரூட்டப்பட்டுத் தயாரிக்கப்படுகிறது. இது கோடை காலத்தில் அனைவராலும் வாங்கப்படுகிறது. தாகம் தீர்ப்பதற்கு உதவுகிறது. உடலுக்கு ஊட்டச் சத்தாகவும் அமைகிறது. 8 மாதம் கோடையாக இருக்கும் தென்னிந்தியாவில் மிகவும் விரும்பி உண்ணப்படுகிறது. மக்கள் கூடும் இடமான ரயில்வே நிலையம், பஸ் நிலையம் ஆகிய இடங்களில் விற்பனை செய்வது உகந்தது.

### செய்முறை

பால் பவுடரோடு, சுடு தண்ணீர் கலந்து தேவையான அளவு வெண்ணையோடு சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது. மொத்தக் கலவையும் குளிரூட்டப்பட்டு இரசாயனப் பொருட்கள் சேர்த்துக் குளிர்ப்பதனப் பெட்டியிலே, பாதுகாக்கப்பட்டு, பின் சாப்ட் ஐஸ்கிரீம் எந்திரத்தில் சேர்க்கப்படும். அந்த எந்திரத்தில் அது உடனடியாகக் குளிரூட்டப்பட்டுக் குளுமையுடன் அளிக்கப்படும்.

நல்ல சராசரி ஐஸ்கிரீம் 12%, கொழுப்பு 11%, பால்திடம் (Msnf) 15%, சர்க்கரை 0.2%, ஸ்டெபிலைசர் (நிலை நிறுத்து) 0.2%, எமேல்லி பைபர் மற்றும் சுவையூட்டியும் உள்ளடங்கியிருக்கும் . இது 38.4% கரையக்கூடிய திடமாகவும் மீதம் தண்ணீராகவும் இருக்கும்.

## நிலம் மற்றும் கட்டிடம்

| | |
|---|---|
| பரப்பு | 200 சதுரஅடி |
| வாடகை | ரூ.600 |
| விசைச் சக்தி | 5 HP |
| மொத்த வேலை நாட்கள் | 8 மாதம் /200 நாட்கள் |

## எந்திரம் விளக்கம்

| | | |
|---|---|---|
| சாஃப்ட் ஐஸ்கிரீம் எந்திரம் கம்ப்ரசர் மோட்டாரோடு | ரூ. | 26,500 |
| மற்ற உபகரணங்கள், பாத்திரங்கள், எடைக்கல்லோடு | ரூ. | 5,000 |
| | ரூ. | 31,500 |

## 5.11 பாப்கார்ன்
## (POPCORN)

தானிய வகைகளின் உற்பத்தியில் சோளம் மற்றும் மக்காச் சோளம் 4-ஆம் இடம் வகிக்கிறது. சோளம் பிரதானமாகப் பஞ்சாப், உத்திரப்பிரதேசம், கர்நாடகா மாநிலங்களில் விளைகிறது.

சோளக்கதிர்கள் தட்டையாக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, பதப்படுத்தப்படுகின்றன. இனிப்புச் சோளக்கதிர்கள் பளபளப்பாகவும் சுருங்கியும் காணப்படும். அவை இனிப்புச்சுவையுடன் கூடியவை. தட்டையான வகைகள் ஸ்டார்ச் தயாரிப்பிற்கும் இனிப்பு வகைகள் காய்கறியாகவும் பயன்படுகின்றன.

பாப்கார்ன் மற்ற வகைச் சோளங்களிலிருந்தும் தயாரிக்கப்படலாம். ஆனால் அவை பிரத்யேக வகையில் பாப்கார்னிலிருந்து தயாரிக்கப்படும் பாப்கார்ன் வகையை விடக் குறைந்த அளவு பாப்கார்ன்களையே அளிக்கும்.

இந்தியாவில் பாப்கார்ன் சூஜியாகவும், சோளப் பொரியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. மக்காச்சோள வகை, துணி மற்றும் காகித உற்பத்தியில் ஸ்டார்ச்சாகப் பயன்படுகிறது. ஜெர்ம் ஆயில் வனஸ்பதி தயாரிப்பிற்கு உதவுகிறது. கார்ன் துகள்கள் கால்நடை, கோழி வளர்ப்புத் தீவனமாகப் பயன்படுகிறது. இதைத் தவிரப் பதப்படுத்தப்பட்ட, வறுக்கப்பட்ட மக்காச் சோளம் நொறுக்கு தீனியாகவும் பயன்படுகிறது. இவ்வகை, பொது இடங்களில் சினிமா அரங்குகளில், பஸ், ரயில் நிலையங்களில் விற்கப்படுகிறது.

### செய்முறை

மக்காச்சோளம், தேவைப்படுமளவு உப்பு, மசாலா சேர்த்து பாப்கார்ன் எந்திரத்தில் பயன்படுத்தப்படுகிறது. மக்காச்சோளம் வறுக்கப்பட்டு, குளிரூட்டப்பட்டுப் பாலிதீன் பைகளில் பேக் செய்யப்படுகிறது.

**இலக்கு / தினம்**

200 பைகள், மதிப்பு ரூ.1000

**நிலம் மற்றும் கட்டிடம்**

| | |
|---|---|
| பரப்பு | 500 சதுர அடி |
| வாடகை | ரூ.1,000 |

**எந்திரம் மற்றும் உபகரணம்**

| | எண் | மதிப்பு |
|---|---|---|
| பாப்கார்ன் எந்திரம் | 1 | ரூ. 10,500 |
| சீலிடும் எந்திரம் | 1 | ரூ. 500 |
| எடை எந்திரம் | 1 | ரூ. 1,250 |
| பொறிக்கும் மின் சாதனங்கள் | 1 | ரூ. 1,200 |
| மற்ற உபகரணங்கள், கருவிகள் வேலை மேஜை, நாற்காலி | | ரூ. 1,500 |
| | | ரூ. 14,950 |

**நடை முதல் / மாதம்**

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | | |
| சோளம், சமையல் எண்ணெய் உப்பு, மசாலா, பிளாஸ்டிக் பை | | ரூ. 12,500 |
| சம்பளம், கூலி, உதவியாளர் | 1 | ரூ. 600 |

**மற்ற செலவுகள்**

| | |
|---|---|
| மின்சாரம் | ரூ. 600 |
| தொலைபேசி மற்றும் எழுதுபொருள் வகை | ரூ. 150 |

# 5.12. திரவசோப்புகள்

## (LIQUID SOAPS)

**விளைபொருள் விவரம்**

**பயன்பாடு**

திரவ டிட்டர்ஜெண்ட்களை சாதாரணமாகத் திரவ சோப்புகள் எ க் காண்கிறோம். அவை, அலுவலகம், ஹோட்டல், காண்டின், லாண்டர் , மருத்துவமனை போன்ற இடங்களில் பயன்படுகின்றன.

**மூலப்பொருட்கள்**

ஆசிட்ஸிலரி

காஸ்டிக்சோடா

யூரியா

தண்ணீர்

**தேவையும் வாய்ப்பும்**

இந்தப் பொருளுக்கு, என்றும் நுகர்வோரிடம் தேவை அதிகமாகிக்கொண்டே போகிறது. இதை விற்பனை செய்வதில் அதிக சிரமமிருக்காது.

**செய்முறை**

ஒரு 10% காஸ்டிக் சோடா கரைசலை அமிலக் குவியலுடன் கலந்து, மஞ்சள் நிறம் வரும்படி செய்யப்படுகிறது. யூரியாவை மீதி நீருடன் கலக்க வேண்டும். வேண்டுமானல் வாசனைத் திரவியம் சேர்க்கப்பட்டுக் கொள்கலன்களில் அடைக்கலாம்.

## திட்ட விவரம்

ஆண்டிற்கு சுமார் 60,000 லிட்டர் தயாரிக்கலாம்

## நிலம் மற்றும் கட்டிடம்

| | |
|---|---|
| 300 சதுர அடிக் கட்டிடம் வாடகைக்கு | ரூ. 800 |

## எந்திரம் மற்றும் உபகரணங்கள்

*நிலை முதல்*

| | |
|---|---|
| தொட்டி FRP லைனிங்குடன் 500 லிட்டர் கலன்கள் கலக்கி | ரூ. 14,000 |
| HDPE சேமிப்புக் கலன்கள், வாளிகள், குவளைகள் அடுக்குகள் | ரூ. 2,000 |
| எடை எந்திரம், மேசை நாற்காலிகள் | ரூ. 4,000 |
| | ரூ. 20,000 |

*நடப்பு முதல்*

| | |
|---|---|
| மூலப் பொருட்கள் அமிலக்குவியல், காஸ்டிக் சோடா முதலியன | ரூ. 21,000 |
| பேக்கிங் கலன்கள் | ரூ. 6,000 |
| வாடகை,மின்சாரம் | ரூ. 1,400 |
| அலுவலர்கள், கூலியாட்கள் இருவர் | ரூ. 1,600 |
| | ரூ. 30,000 |
| மொத்த மூலதனம் | ரூ. 50,000 |

## தயாரிப்புச் செலவு ஆண்டிற்கு

| | | |
|---|---|---|
| தொடர் செலவுகள் | ரூ. | 3,60,000 |
| வட்டி 12% | ரூ. | 6,000 |
| தேய்மானம் 10% | ரூ. | 2,000 |
| | ரூ. | 3,68 ,000 |
| ஆண்டு விற்பனையளவு | ரூ. | 4, 10, 000 |
| லாபம் | ரூ. | 42, 000 |
| விற்பனையில் லாபம் | 10% | |

வேலைவாய்ப்பு இருவருக்கு

## எந்திர விற்பனையாளர்கள்

M/s. சுமதி எண்டர் பிரைசஸ்,
3 R.K.மட்ரோடு, மயிலாப்பூர், சென்னை -1

M/s.செமெக என்ஜினியர்ஸ் பி.லிட்.
மாண்டியத் லேன், எழும்பூர், சென்னை -8

M/s.இண்டாகெம் கெமிகல் பிராசஸ் கம்பெனி,
17,4வது ட்ரஸ்ட் கிராஸ் தெரு, மந்த வெளிப்பாக்கம், சென்னை -28

## மூலப்பொருள் விற்பனையாளர்கள்

M/s.சாந்தி கெமிகல் கார்ப்பரேஷன்,
80, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1

M/s.பன்சாலி கெமிக்கல்ஸ்,
127, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை-3

M/s.மகாவீர் கெமிக்கல்ஸ்,
134, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை-3

# 5.13 கற்பூர வில்லைகள்
## (CAMPHOR)

### அறிமுகம்

பெரும்பாலான எல்லா இல்லங்களிலும், கோவில்களிலும் எல்லாக் காலங்களிலும் தேவைப்படுவதாலும், வாசனை பரப்புவதாலும் பயன்படுத்துவதால், கற்பூரம் பக்திப் பொருளாய்ப் பண்டை காலத்திலிருந்து பயன்படுத்தப்படுகிறது.

### பொருள் விவரம்

கற்பூரவில்லைகள்

### தேவையும் வாய்ப்பும்

கோவில்களில் மக்கள் பூசைப் பொருளாக ஏற்றுக் கொண்டபடியால், பண்டிகை நாட்களிலும், விழாக்காலங்களிலும் கற்பூர விற்பனைக்குப் பிரகாசமான வாய்ப்புள்ளது.

### மூலப்பொருட்கள்

கற்பூரப் பவுடர்

### செய்முறை

கற்பூரப்பொடி, தண்ணீருடன் சேர்த்து ஈரமாக்கப்பட்டு வில்லைகள் தயாரிக்கும் பொறியினால் வில்லைகளாக்கப்பட்டுப் பாலிதீன் உறைகளில் பேக் செய்யப்படுகிறது. எடையினைப் பொறுத்து வடிவம் அமைகிறது. சாதாரணமாக 1 செ.மீ/ 2 செ.மீ சதுர வடிவத்தில் செய்யப்படுகிறது.

## திட்டவிவரம்

ஆண்டிற்கு சுமார் 3,000 கிலோ கற்பூர வில்லைகள் தயாரிக்கலாம்.

## நிலம் மற்றும் கட்டிடம்

20' X15' வாடகைக்கு ரூ.800

## எந்திரம் மற்றும் உபகரணம்

*நிலை முதல்*

| | | |
|---|---|---|
| கற்பூரவில்லை தயாரிக்கும் எந்திரம் மின்சக்தியால் இயக்கப்படுவது | ரூ. | 20,000 |
| வெவ்வேறு அளவு வடிவமைப்பான் | ரூ. | 5,000 |
| | ரூ. | 25,000 |

*நடப்பு முதல்*

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | ரூ. | 20,000 |
| அலுவலர் மற்றும் வேலையாட்கள் | ரூ. | 1,600 |
| மற்ற செலவுகள் | ரூ. | 5,400 |
| | ரூ. | 27,000 |
| மொத்த மூலதனம் | ரூ. | 52,000 |
| ஆண்டு உற்பத்திச் செலவு | ரூ. | 3, 24, 000 |
| வட்டி | ரூ. | 6,000 |
| தேய்மானம் | ரூ. | 2,000 |
| ஆண்டு மொத்தச் செலவு | ரூ. | 3 ,32 ,000 |

| | | |
|---|---|---|
| மொத்த ஆண்டு விற்பனை | | ரூ. 3, 75, 000 |
| லாபம் | | ரூ. 43,000 |
| லாப சதவீதம் | 11% | |
| வேலைவாய்ப்பு | 3 | |

## மூலப்பொருள் விற்பனையாளர்கள்

M/s. கேம்பர் அண்டு அலைட் ப்ராடக்ட்ஸ் லிட்,
50, கஸ்தூரி ரங்க ஐயங்கார் சாலை, சென்னை -18

M/s.எக்ஸெல் இண்டஸ்ட்ரீஸ் லிட்,
184-187, ஸ்வாமி விவேகானந்தா சாலை, மும்பை -400 010.

M/s. கிரிஸ்டல்ஸ் கெமிக்கல்ஸ், (பி) லிட். 9-15 ஸ்விம்போ லேன், கொல்கத்தா -700 042

**குறிப்பு**

*மேலே கொடுக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கைகள் அனைத்தும் தோராயமான அளவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. பயிற்சி நடைபெறும் பொழுது இத்திட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புகள் விலை ஏற்ற தாழ்வைப் பொறுத்து மாறி இருக்கலாம். மூலப்பொருள் விற்பனையாளர்களின் விலாசமும் மாறி இருக்கலாம்.*

# 6.1 மஞ்சள் பை தயாரிக்கும் நிறுவனம்

(செல்லியம்மாள் மகளிர் சங்கம்)

**பவானி நகராட்சி**

'செல்லியம்மாள் மகளிர் சங்கம்' தினக் கூலியாகத் துணிக் கடைகளில் வேலை செய்து வந்த 10 பெண்களால் உருவாக்கப்பட்டது. தினக்கூலி மிகக் குறைவாக இருந்ததால் குடும்பத்தை நிர்வகிக்க மிகவும் கஷ்டப்பட்டு வந்தனர். இந்தத் தருணத்தில் தான் இருப்பிட சமுதாயத் தன்னார்வதொண்டர்கள்பெண்களும் (RCV) கன்வீனர்கள் நடத்திய கூட்டத்திலும் பயிற்சியிலும் பங்கு கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. இங்குதான் SJSRY (சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோசனா) திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொண்டனர்.

மேலும், இப்பெண்கள் நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (DWCUA) பல்வேறு பயன்களைப் பற்றியும் இச்சட்டம் மற்றும் இப்பயிற்சியின் மூலம் தெரிந்து கொண்டார்கள். இந்த விழிப்புணர்வைக் கொண்டு அவர்கள் SJSRY-திட்டத்தின் கீழ், சங்கம் அமைக்க முடிவு செய்தார்கள்.

முதலில் பெண்கள் மஞ்சள் பை தயாரிக்கும் தொழிலைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏனெனில் இது அவர்களுக்குப் பழக்கப்பட்ட ஒரு தொழிலாகவும், பவானி சுற்று வட்டாரத்தில் பரவலாக மேற்கொள்ளப் பட்டு வந்த ஒரு தொழிலாகவும் இருந்தது. இதனால்தான் 'செல்லியம்மாள் மகளிர் சங்கம்' உருவாக்கப்பட்டது.

இந்தச் சங்கம் ஆரம்பத்தில் சிற்சில பிரச்சனைகளை எதிர்கொண்டது. போதிய நம்பகத்தன்மை இல்லாத காரணத்தினால் வங்கிகள் கடனாக முன்பணத்தை முழு வேலைக்குத் தர மறுத்தது. அதன்பிறகு இச்சங்கம் பவானி, கனரா வங்கியில் தனது சேமிப்புக் கணக்கைத் துவக்கியது. இதன் மூலம் கனராவங்கி, குறைந்த வட்டியில் (ரூபாய் 1சவரத்திற்கு) கடனுதவி செய்து இச்சங்கம் தனது பணியைச் செய்ய உதவி புரிந்தது.

இச்சங்கத்தின் முதலாம் ஆண்டு முடிவில் ஒவ்வொரு உறுப்பினரின் சேமிப்பு ரூபாய் 500 ஆகவும், சுழற்சிப் பணமாக ரூ. 10,000 உம் முனிசிபாலிடி மூலமாகக் கிடைக்கப்பெற்றது. இவர்களின் உற்பத்தி மூலப் பொருள்களை வாங்குவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. மேலும் குழு உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கவும் உதவியது. குழுவின் சேமிப்பு ரூபாய் 30,000 ஆக உயர்ந்தவுடன் துணி தைக்கும் இயந்திரம் வாங்கவும், மஞ்சள் துணிகள் வாங்கவும் SJSRY-DWCUA திட்டத்தின் கீழ் வங்கியில் கடனுக்கு மனுச் செய்தனர்.

இத்தருணத்தில், கடலூர் நகராட்சி சுயஉதவிக் குழுப் பெண்கள் தயாரித்த பணிகளையும் திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்தனர். இதன் மூலம் ரூபாய் 36,000த்தை, 50 சதவீதம் மானியத்துடன் வங்கி கடனாக அளித்தது.

இக்குழு ஆரம்பிக்கும் முன்பாகப் பெண்கள் தினக் கூலியாகச் சுமார் ரூபாய் 30 மட்டும் பெற்று வந்தார்கள். ஆனால் இக்குழு ஆரம்பித்து அவர்கள் தொழில் தொடங்கிய பிறகு மிகவும் முன்னேற்றமடைந்து, குழுவிற்குச் சொந்தமாக 5 தையல் இயந்திரம் அதற்குத் தேவையான மற்ற உபகரணங்களையும் கொண்டு சிறந்த முறையில் தொழில் செய்து ஓரளவிற்கு லாபமும் பெற்று வருகிறார்கள்.

சங்கத்துக்கு ஏறக்குறைய 3,000 பைகள் தயாரித்துக் கொடுத்து அதன் மூலம் மாதம் ரூ 15,000 லாபம் பெறுகிறார்கள். மேலும் வங்கிக் கடன் திரும்பச் செலுத்தப்பெறுவது முறைப்படுத்தப்படுவதால் இப்பெண்கள் தமது வீட்டு உபயோகப் பொருட்களான டீவி, சைக்கிள், கிரைண்டர், மிக்ஸி, வாங்கவும் குழந்தைகளின் பேரில் வைப்புநிதி வைக்கவும் செய்ய முடிகிறது.

இவ்வாறாகச் சுயத்தொழில்கள் மூலம்நகர்ப்புற ஏழைப் பெண்கள் வருமானம் ஈட்டுவதால் சுயமாகத் தங்களுக்கும், குழந்தைகளுக்கும் தமது குடும்பங்களுக்கும் முன்னேற்றத்தைப் பெறமுடிகிறது.

# 6.2 கட்பீஸ் துணி விற்பனை

(முல்லை மகளிர் மன்றம்)

தஞ்சாவூர் முனிசிபாலிட்டி

தஞ்சாவூர் முனிசிபாலிட்டியின் 19-ஆவது வார்டைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த 10 குடும்பங்கள் சமுதாய ஒருங்கிணைப்பாளரின் முயற்சியால் நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் குழுவாகச் சேர்ந்தனர். இதன் பெயர் தான் 'முல்லை மகளிர் மன்றம்'

இக்குழு உறுப்பினர்கள் மிகவும் வறுமையுடன் தமக்கு வருமானத்திற்கான வழி தெரியாமல் இருந்தபொழுது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பலவகையான வறுமை ஒழிப்புத் திட்டங்களைப் பற்றிக் கேள்விப்பட்டனர். அதன்பிறகு அண்டை வீட்டுக் குழுக்களில் (NHG), கூட்டங்களில் பங்கேற்று அதன் நடவடிக்கைகள் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினர்.

தஞ்சாவூர் முனிசிபாலிட்டியின் திட்ட அலுவலரும் சமுதாய மேம் பாட்டுச் சங்கத்தின் உறுப்பினர்களும் SJSRY திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்களைப் பற்றியும் இக்குழு உறுப்பினர்களுக்கு விளக்கினர்.

SJSRYயின் இரு திட்டங்களைப் பற்றி அனைத்துக் குழு உறுப்பினர்களும் ஆர்வத்துடன் தெரிந்து கொண்டு, ஒவ்வொருவரும் ஒரு சுயதொழில் தொடங்க முனைந்தனர். இதில் திருமதி S. R. பத்மாவதி என்ற ஒரு உறுப்பினர் கட்பீஸ் துணி விற்பனைக்கான திட்டத்துடன் வந்தார். பிறகு அனைத்து உறுப்பினர்களும் இதனைக் கலந்து ஆலோசித்து அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்தனர். திருமதி பத்மாவதியின் கணவர் திரு ரவி அவர்கள் இக்கட்பீஸ் வியாபாரத்தில் மிகவும் அனுபவம் மிக்கவர் என்பதால் அவர் இதன் எதிர்காலப் பயன்களைப் பற்றி இப்பெண்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்தத் தூண்டுதல் இப்பெண்களை நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் திருமதி பத்மாவதியின் தலைமையில்

இணைய வைத்தது. (இவர்கள் சுமார் ஒரு லட்சம் மதிப்புக்களாக சிண்டிகேட் வங்கி 50 சதவிகித மானியத்தடன் கடனுதவி அளித்து) சமுதாய முன்னேற்றச் சங்கத்தின் மூலமாக) **8-11-99** அன்று பணத்தை அளித்தது. இதற்கு வங்கி 36 மாதத்திற்குள் மாதா மாதம் திருப்பிச் செலுத்தும் கால அளவு நிர்ணயித்தது. அதன்படி இக்குழு 15-01-2001 அன்று மொத்த **கடனாகவும்** வங்கிக்கு செலுத்தியது.

இக்கட்பீஸ் வியாபாரத்தின் மூலம் இக்குழு ஒரு நாளைக்கு ரூபாய் 300-ஐ இலாபமாகப் பெறுகிறது. இதன்மூலம் இக்குழுப் பெண்கள் வறுமையிலிருந்து ஓரளவு விடுபட்டுக் குடும்பத்தை நிர்வாகம் செய்ய முடிகிறது.

# 6.3 பேக்கரிப் பொருட்கள் உற்பத்தி செய்தல்

(உதயம் மகளிர் சிறு சேமிப்புக் குழு)

**திண்டுக்கல் நகராட்சி**

திண்டுக்கல் முனிசிபாலிட்டி எம் ஆர் பட்டி 13-ஆவது வார்டில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 20 பெண்கள் ஒன்று சேர்ந்து 1999 ஆம் வருடம் ஜூலை மாதம் காவேரி மகளிர் சேமிப்புக் குழுவைத் தொடங்கினர். இதிலிருந்து 10 பெண்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு உதயம் மகளிர் சிறு சேமிப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டது.

இவர்கள் வங்கிக் கடனாக ரூபாய் 50,000/-ஐக் கோரினர். இவர்கள் கேட்ட கடன் தொகை கார்ப்பரேசன் வங்கியின் மூலமாக வழங்கப்பட்டு, பேக்கரிப் பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இவர்களில் 3 உறுப்பினர்கள் உற்பத்தி செய்வதிலும் மற்ற 7 உறுப்பினர்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருளை பாக்கெட் செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த வேலைகள் அனைத்தும் திருமதி விஜயா என்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்றது.

இந்தத் தொழில் மூலமாக மாதந்தோறும் சுமார் ரூபாய் 1,500/-ஐ வங்கிக் கடனுக்கும் ரூபாய் 500/-ஐத் தபால் நிலையத்துக்கும் சேமிப்பு நிதியாக மாதந்தோறும் கட்டுகிறார்கள். மீதமுள்ள ரூபாய் 3000/-ஐக் குழு உறுப்பினர்கள் சரிசமமாகப் பிரித்துக் கொள்கிறார்கள்.

வங்கிகளும் நகராட்சி அலுவலகங்களும் இவர்களின் முக்கிய வாடிக்கையாளர்கள். தங்களின் கூட்டங்களுக்கும் விழாக்களுக்கும் இக்குழுவிடம் சிற்றுண்டிகளை வாங்குவது வழக்கம். இது குழுவிற்கும் அலுவலர்களுக்கும் மிகவும் உதவிகரமாக உள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக இக்குழு உறுப்பினர்கள் தங்களது தொழிலைச் சிறப்பாக முன்னேற்றமடையச் செய்ததன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத் தரமும் வாழ்க்கை முறையும் உயர்ந்துள்ளது.

# 6.4 மெழுகுவர்த்தி உற்பத்தி

(டயானா மகளிர் சிறு சேமிப்புக் குழு)

திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சியில் சமுதாய முன்னேற்றச் சங்கத்தின் ஒரு சில நிகழ்ச்சிகளால், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சில பெண்கள் இணைந்து நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுக் குழுவை ஆரம்பித்து அதற்கு 'டயானா மகளிர் சிறு சேமிப்புக் குழு' எனப் பெயரிட்டனர். இந்தக் குழு மெழுகுவர்த்தி உற்பத்தியைத் தன் சிறப்புத் தொழிலாக்கியது.

மெழுகுவர்த்தி உற்பத்தியில் தனிச்சிறப்பு பெற்ற திருமதி பாத்திமா ஜோசப்பின் தலைமையில் 1999 ஆம் வருடம் ஜனவரி மாதம் இக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழு 1999 ஆம் வருடம் ஜூன் மாதம் நகராட்சி அலுவலகத்தை அணுகி 75,000 ரூபாயைத் தொழில் தொடங்கக் கடனாகக் கோரியது. நகராட்சி அலுவலர்கள் செயல் திறன் கூட்டத்தில் இதன் நிரந்தரத்தன்மையை ஆலோசித்துக் கடனுக்கான மனு திண்டுக்கல் கனரா வங்கிக்கு அனுப்பப்பட்டது.

வங்கியின் தீவிர அலசலுக்குப் பிறகு 2001 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 50 சதவிகித மானியத்துடன் வங்கிக் கடனாக ரூபாய் 75, 000 வழங்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட மெழுகுவர்த்திகள் கடைகளுக்கும், கிறிஸ்துவக் கோயில்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. தற்போது மெழுகுவர்த்தி வியாபார சந்தை சிறப்பாக உள்ளதால் குழு உறுப்பினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 50 சதவிகித வங்கிக்கடன் திருப்பிச் செலுத்தப்பட்டு, மீதமுள்ள குறிப்பிட்ட கால அவகாசத்தில் அடைத்து வருவார்கள். மேலும் இக் குழு ரூபாய் 5000-ஐ மாதந்தோறும் இலாபமாகப் பெறுகிறது. இக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பற்ற கிறிஸ்துவர்கள். தற்போது இச்சிறு தொழில் மூலம் இவர்களுடைய வருமானம் கணிசமாக நிரந்தரத் தன்மையுடன் அதிகரிப்பதால் எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயத் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் இவர்கள் வாழ்கிறார்கள்.

# 6.5 சிறு பால் பண்ணை

( ஜான்சிராணி மகளிர் மன்றம் )

**தஞ்சாவூர் நகராட்சி**

தஞ்சாவூர் நகராட்சியின் மையத்தில் காமாட்சி அம்மன் கோயில் எதிர்ப்புறத்தில் ஒரு சிறு வீட்டின் முன்புறமுள்ள 'ஜான்சி ராணி சிறு பால் பண்ணை' என்ற பெயர்ப்பலகை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. வறுமையில் சிக்கித் தவிர்க்கும் சில பெண்கள் ஒன்று சேர்ந்து ஒரு வீட்டு உறுப்பினர்களைப் போலக் குழுவாக செயல்பட்டு இந்த மகளிர் மன்றத்தை ஆரம்பித்தனர்.

இந்த 'ஜான்சி ராணி சிறு பால் பண்ணை' தஞ்சாவூர் மாவட்டத்தின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த புறவழிச்சாலையின் அருகில் அமைந்துள்ளது. ஒவ்வொரு நிமிடத்திற்கும் சுமார் 10-க்கும் மேற்பட்ட லாரிகளும், பஸ்களும் இந்தச் சாலையைக் கடந்து செல்லும். ஆதலால் இதன் வழியாகச் செல்லும் அனைத்து பஸ் மற்றும் லாரி டிரைவர்கள், கிளினர்கள் மற்றும் பயணிகளும் இந்த பால்பண்ணைக்குச் சென்று பால், மற்றும் பால் சார்ந்த பொருட்களையும் அருந்திச் செல்வார்கள். இக்குழுப் பெண்கள் தங்களது துணிவான, அன்பான வார்த்தைகளால் வாடிக்கையாளர்களை எளிதில் கவர்ந்துள்ளார்கள்.

திருமதி - பாப்பாத்தி என்பவர் இக்குழுவின் தலைவி. இக்குழு தஞ்சாவூர் மாநகராட்சியின் கீழ் செயல்படுகின்றது. இக்குழு உறுப்பினர்கள் மிகவும் வறுமையில் துவண்டாலும் அனைவரும் சிறு தொகையைச் சேமித்துச் சங்கத்தில் வைத்துள்ளனர்.

இந்த நிலையில், அண்டைவீட்டுக் குழுவின், சமுதாயத் தன்னார்வலர்கள் அவர்கள் மூலமாக நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு மற்றும் நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற சில சுய வேலை வாய்ப்புத் திட்டங்களைக் கேட்டறிந்தனர். இதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து 'ஜான்சி ராணி சிறு பால் பண்ணை' திருமதி பாப்பாத்தி தலைமையில் ஆரம்பித்துள்ளார்கள்.

இக்குழு ஆரம்பிக்கும் முன்புவரை தினக்கூலியாக மிகவும் குறைந்த வறுமானத்தில் அடிப்படைத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாமல் இப்பெண்கள் பட்டினியால் வாடியுள்ளார்கள்.

இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்ட பிறகு இக்குழு, ரூபாய் ஒரு லட்சத்தை வங்கிக் கடனாக நகராட்சியின் உதவியுடன் நகர்ப்புறப் பெண்கள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்தியன் வங்கியில் பெற்றுள்ளது. இதன்மூலம் குழு உறுப்பினர்கள் சொந்தமாக மாடுகள் வாங்கிப் பால் பொருள்கள் உற்பத்திக்குத் தங்கு தடையில்லாமல் பால் பெற்று, வங்கிக் கடனைக் குறித்த கால அவகாசத்திற்குள் அடைத்து விட்டார்கள்.

தற்போது தங்களது முழு வங்கிக் கடனையும் அடைத்து விட்டார்கள். மேலும் வருமானம் தற்போது மிகவும் நிரந்தரத் தன்மையுடன் அதிகரித்து, உறுப்பினர்களை வறுமையிலிருந்து விடுபடச் செய்துள்ளது.

# 6. 6 பட்டுச்சேலை நெசவுத் தொழில்

*( சிங்காரம் சுய உவிக்குழு )*
*கும்பகோணம் நகராட்சி*

சிங்காரம் சுய உதவிக்குழுவானது நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுச் சமூக ஒருங்கிணைப்பாளரின் சீரிய பயிற்சியிலும், கண்காணிப்பிலும் நடைபெறுகின்றது. திலகர் வீதியைச் சார்ந்த பிற்பட்டோர் சமூகத்தை சார்ந்த பெண்களே இச்சுய உதவிக்குழு உறுப்பினர்கள். அவர்கள் குடும்பத்தொழிலாக நீண்ட காலந்தொட்டு இந்தப் பட்டு நெசவுத் தொழில் நடைபெறுகின்றது.

ஆதலால் இக்குழு உறுப்பினர்கள், போதிய பயிற்சி அளிக்கப்பட்டு குறிக்கோளை அடைய, குழுவாக ஊக்கப்படுத்தப்பட்டனர். ஆரம்ப கட்டத்தில் சில உறுப்பினர்கள் இத்தொழிலில் ஈடுபட மிகவும் தயக்கம் காட்டினர். ஆனால் சமுதாய ஒருங்கிணைப்பாளர் அனைத்து விபரங்களையும் அளித்து, அவர்களிடம் நம்பிக்கை உண்டாக்கி சமாதானப்படுத்தி இக்குழுவை ஆரம்பிக்க வைத்தார்.

இக்குழு தனது தலைவியாகத் திருமதி. மாலதியைத் தேர்ந்தெடுத்தது. அவருக்குச் சமூக ஒருங்கிணைப்பாளரால் இத்தொழிலைப்பற்றிய போதுமான பயிற்சியும், கல்வியும் அளிக்கப்பட்டு உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. என்னென்ன பிரச்சனைகள், தடைக்கற்கள் வந்தபொழுதும் அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டன. ஒருவருக்கொருவர் சார்புடைய தன்மை உருவாக்கப்பட்டது.

இக்குழு ஆரம்பிக்கும் முன்பாக உறுப்பினர்கள் மிகக்குறைந்த ஊதியத்திற்கு நெரிசலில் வேலை செய்தனர். மேலும் தலைமை நெசவாளருக்கு அடிமையாக இருந்து வந்தார்கள். அவர்களால் நெய்யப்பட்ட பட்டுப்புடவை மிக அதிக விலைக்கு விற்கப்பட்டது. ஆனால் நெசவாளி மிகக் குறைந்த ஊதியத்தையே வருமானமாகப் பெற்றார். மேலும், உற்பத்தி செய்த பட்டுப்புடவையை எவ்வாறு லாபமுடன் சந்தைப்படுத்துவது எனவும் அவர்களுக்குப் புலப்படவில்லை.

இச்சூழ்நிலையில், குழுவின் தலைவி திருமதி. மாலதி வங்கி அதிகாரிகளிடமும், ஊழியர்களிடமும் நல்ல உறவை வளர்த்துக் குழுவின் வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் வழிகோலினார். இதன் மூலமாக வங்கிக் கடனாக ரூபாய் 1, 40, 000/- கும்பகோணம், ஜி நகர் காலனி கிளையான கனரா வங்கி மூலமாக 'சிங்காரம் சுய உதவிக் குழு'விற்கு 50 சதவிகித மானியத்துடன் வழங்கப்பட்டது.

# 6.7 காலணி தயாரிக்கும் நிறுவனம்

(மல்லிகைப்பூ மகளிர் மன்றம்)

## கோபி செட்டிபாளையம் நகராட்சி

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த பத்துப் பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆரம்பித்த குழுவே மல்லிகைப்பூ மகளிர் மன்றம் ஆகும். இதன் தலைவி திருமதி சரஸ்வதி, உபதலைவி திருமதி கலா.

அனைத்து உறுப்பினர்களும் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள்; மேலும் பண்டைக் காலந்தொட்டு அடிமைப்படுத்தப் பட்டவர்கள். போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் முதலீடு செய்ய இயலாமல் தங்களால் சொந்தமாக எந்தத் தொழிலும் செய்ய இயலவில்லை. நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட பிறகு தங்கள் முன்னேற்றத்திற்குக் காலணி தயாரிக்கும் தொழிலைக் குழு முயற்சியாக ஆரம்பித்தனர்.

இந்தச் சூழ்நிலையில் இக்குழு நகராட்சியை, உதவி கோரி அணுகிய பொழுது கனரா வங்கியிடம் அறிமுகப்படுத்தப்பட்டது. தகுந்த பாதுகாப்புச் சான்றுடன் கனரா வங்கி 20-03-2007 அன்று ரூபாய் 38, 000 - ஐ 50 சதவிகித மானியத்துடன் வழங்கியது.

இக்குழு ஆரம்பிக்கும் முன்பாக ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் ரூபாய் 500 மட்டும் சம்பாதித்தார். ஆனால் தற்போது ரூபாய் 1000-ஐ லாபமாக மக்கள் பெற்று வருகிறார்கள். இதற்கிடையில் நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மேலும் உதவி பெற்றுத் தொழிலில் நிரந்தர வளர்ச்சி அடைந்துள்ளார்கள். மேலும், அவர்கள் சமூகமும் போதிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இக்குழுத் தொழில் அவர்களைச் சுயசார்புடையவர்களாக மாற்றித் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க வைத்துள்ளது.



# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net இணையம் : www.tnius.org

நந்தி ஆப்செட், கோவை - 43. ☎ 4202395